## நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் நாள் வியாழ கிழமை காலை 11.00 மணிக்கு நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்.

நகராட்சி அலுவலகம்,
நந்திவரம்–கூடுவாஞ்சேரி
நாள். 31.03.2022

**நகர் மன்ற தலைவர்**
**நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி.**

---

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் மார்ச் 2022 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.12**

மன்றத்தின் பதிவிற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.2**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி – வருடாந்திர வரவு செலவு திட்டம் – 2022–23. ம் நிதியாண்டிற்கான பட்ஜெட் திட்டம். இந்நகராட்சியானது பேரூராட்சியிலிருந்து அரசாணை (நிலை) எண் – 94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் – 01.11.2021 .ல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அரசாணை (நிலை) எண்.122 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 08.12.2021ன் இரண்டாம் நிலை நகராட்சியாக அறிவிக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது. மேலும் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட விதத்தில் ஆண்டு பட்ஜெட் திட்டமானது ஆக்க பணிகளுக்கு மிக அவசியம் என்பதால் நகராட்சியில் இயங்கி வரும் பொது பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொது சுகாதார பிரிவு, ஆகிய பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி பணிகள், பராமரிப்பு பணிகள் பொதுநலன் கருதி மேற்கொள்ள மிக அவசியமாகின்றது. எனவே கீழ்க்கண்டுள்ள பிரிவு வாரியாக 2022–2023–ம் நிதியாண்டிற்கு செலவினம் மேற்கொள்ள மன்றபொருள் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. <u>பொதுப்பிரிவு :</u>

இப்பிரிவில் பணியாளர்கள் சம்பளம், நகர்மன்ற உறுப்பினர்கள் அமர்வு படி, கணிணி சம்மந்தமான பராமரிப்பு பணி, நகராட்சி தொடர்பான வழக்கு செலவு, பொதுமக்கள் விழிப்புணர்வு அறிவிக்கைகள் அச்சடித்தல் மற்றும் முக்கிய

நிகழ்வுகளுக்கு ஆகும் செலவினம் போன்ற இன்றியமையாத பணிகள் மேற்கொள்ள வருகின்ற 2022–23 நிதியாண்டிற்கு உத்தேச நிதி ஒதுக்கீடு ரூ.2.00/கோடி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

2. <u>பொது சுகாதார பிரிவு :</u>

இப்பிரிவில் சுகாதார தூய்மை பணிகளின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நாள்தோறும் குப்பைகளை அள்ளும் பணியானது ஆட்கள் வெளிக்கொணர்வு (Outsourcing) முறையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் அதற்கான புதிய வாகன கொள்முதல், ஆட்கள் வெளிகொணர்வு முறையில் சப்ளை செய்யும் நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய சம்பள தொகை, வாகன வாடகை செலவு, வாகன பயன்பாடு, தூய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், தளவாட சாமான்கள், கிருமி நாசினி, பிளீச்சிங் பவுடர் போன்ற சுகாதார பொருட்கள் வாங்கி வழங்கிடும் விதத்தில் 2022–23 ம் நிதியாண்டிற்கு ஆகும் உத்தேச நிதி ஒதுக்கீடு ரூ.5.00/கோடி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

3. <u>வருவாய் பிரிவு :</u>

இப்பிரிவில் சொத்துவரி, தொழில்வரி, கடை வாடகை ஆகிய வரி இனங்கள் மற்றும் வாடகை இனங்கள் உள்ளடங்கிய பிரிவாகும், மேலும் இப்பிரிவில் கணிணி இரசிதுகள் அச்சடித்தல், Demaond Notice அச்சடித்தல் மற்றும் இதர வருவாய் பிரிவு சம்மந்தமான செலவினங்களுக்கு 2022–23ம் நிதியான்டிற்கு ஆகும் உத்தேச நிதி ஒதுக்கீடு ரூ. 20.00/ இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

4. <u>நகரமைப்பு பிரிவு:</u>

இப்பிரிவில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கட்டிட உரிமம், மனை வரன்முறைபடுத்துதல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்ற பணிகள் மிக அவசியம் ஆகின்றது. மேலும் இப்பிரிவில் நேர்ப்படும் அத்தியாவசிய பணிகளுக்கு ஆகும் உத்தேச நிதி ஒதுக்கீடு ரூ.10.00/ இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

5. <u>பொறியியல் பிரிவு</u> :

இப்பிரிவில் புதிய சிமெண்ட் சாலை மற்றும் தார்சாலை, வடிகால் பணி, குடிநீர் பணி, கட்டிடப் பணி, தெரு மின்விளக்கு பணி இதர மேம்பாட்டு பணி மற்றும் வளர்ச்சி பணிகள் மிக இன்றியமையாததால், பொது நலன்கருதி தற்போது 30/வார்டுகளாக

உயர்த்தப்பட்டுள்ள காரணத்தினால் மேற்படி ஒவ்வொரு வார்டுகளில் உள்ள அடிப்படை தேவைகளின் அவசியம் கருதி 2022–23ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச நிதி ஒதுக்கி ரூ. 10.00/கோடி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

6. <u>பேரிடர் கால செலவினம் :</u>

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பருவ கால மழையின்போது ஏற்படும் பாதிப்புகளான தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்குவது, சாலைகளில் பள்ளம் ஏற்படுவது, கால்வாய் உடைப்பு, குடியிருப்புகளில் வெள்ளநீர் செல்வது மற்றும் மழைக்காலங்களில் சாலை ஓர மரங்கள் சாய்வது போன்ற பேரிடர் காலங்களில் ஏற்படும் இழப்புகளுக்கும் மற்றும் வறட்சி காலங்களில் ஏற்படும் குடிநீர் தட்டுபாடு கருதி ஏற்படும் குடிநீர் விநியோகம் சம்மந்தமான அவசியப்பணிகளுக்கு செலவினம் மேற்கொள்ள அவசியமாகின்றது. எனவே மழைக்காலங்கள் மற்றும் வறட்சி காலங்களில் ஏற்படும் எதிர்பாராத செலவினம் கருதி 2022–2023–ம் நிதியாண்டிற்கு ஆகும் தோராய நிதி ஒதுக்கீடு ரூ.1.00/கோடி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நிர்வாக செலவினம், வளர்ச்சி பணிகள் மற்றும் பேரிடர் கால பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட உத்தேச செலவின நிதி பொது நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.13**

மன்றத்தின் பதிவிற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதற்கான மாதந்தோறும் செலவினங்கள் மேற்கொள்ளும் போது மன்றத்தின் பார்வைக்கு வைத்து அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டு இம்மன்றத்தில் பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.3**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி கூட்ட எண்–4 14.03.2022 தேதியில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் வருகைபுரிந்த அனைத்து நகரமன்ற உறுப்பினர்களிடமிருந்து வரபெற்ற விண்ணப்பங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் நகர் மன்ற தலைவர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்ட விவரத்தினை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் நகர்மன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள மனுக்களில் கோரப்பட்டுள்ள பணிகளை நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர், நகராட்சி திட்ட ஆய்வாளர், நகராட்சி சுகாதார

ஆய்வாளர் ஆகியோர்களால் தல ஆய்வு மேற்கொண்டு மதிப்பீடுகள் தயார் செய்து நகராட்சியின் நிதிநிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் பொதுநிதி மற்றும் அரசு மானியம் மூலம் பணிகள் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.14**

உரிய மதிப்பீடு தயார் செய்ய மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண். 4**

**தமிழ்நாடு அரசு சட்ட மன்ற பேரவை 2017 – 18 ஆம் ஆண்டு கோரிக்கை எண். 26–ன் படியான அறிவிப்பு :**

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் எல்லை விரிவாக்கத்திற்கென செங்கல்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல் குறித்து சட்டமன்ற பேரவையில் 03.07.2017 அன்று மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி செங்கல்பட்டு மாவட்டத்தை சார்ந்த நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் அடங்கிய 30/ வார்டுகள் உள்ளது. இதனை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும (CMDA) எல்லையுடன் இணைத்திட கருத்துரு வழங்குமாறு நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார். எனவே இந்நகராட்சியில் அமைந்துள்ள 30 / வார்டுகளை சென்னை பெருநகர வளர்ச்சி குழும (CMDA) எல்லையுடன் இணைத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

பார்வை :

1. அரசு நே.மு.க.எண். 14627/UD1/2021–4. நாள்.16.02.2022
2. CMDA கடித எண். C1/11127/2017. நாள். 04.03.2022 ( addressed to PS to Govt H& UD Department, Secretariat)

**அலுவலக குறிப்பு** – மன்ற பொருளில் கண்டுள்ள 30 / வார்டுகளை சென்னை பெருநகர வளர்ச்சி குழும (CMDA) எல்லையுடன் இணைத்திட மன்றம் ஏகமனதாக ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.15**

அரசு கடிதங்களின் படி மேல் நடவடிக்கை எடுக்க மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண். 5**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அரசாணை (நிலை) எண்.94 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021–ன் படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அரசாணை (நிலை) எண்.122 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 08.12.2021ன் இரண்டாம் நிலை நகராட்சியாக அறிவிக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது.

மேலும், தரம் உயர்த்தப்பட்ட இந்நகராட்சியானது 30 / வார்டுகளாக உயர்த்தப்பட்டு நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022. நடைபெற்று முடிவுற்றுள்ளது. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா தடுப்பு நடவடிக்கையின் முன்னெச்சரிக்கை பணிகள் மற்றும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பணிகள், தனியார் மூலம் ஆட்கள் வெளிக்கொணர்வு தூய்மை பணியாளர் பொது நலன் கருதி துரித வேகத்தில் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் மேற்காணும் பொது சுகாதார பணிகளுக்குண்டான ஒப்பந்தப்பணிகள் மார்ச்–31–2022ல் முடிவடைவதால் தூய்மைப்பணியின் தொடர் அவசியம் கருதியும், தற்போது முடிவடைந்துள்ள நகர்புற உள்ளாட்சி தேர்தல் மன்ற கூட்டம் தற்போது நடைபெறும் நிலையில் குறுகிய காலத்தில் ஒப்பந்த புள்ளி கோர இயலாத நிலையில் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு பணியின் அவசியம் கருதி ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்தங்களுக்கு அதே விலைவிகிதத்தில் ஏப்ரல்–2022 முதல் ஜுன்–2022 வரையில் மூன்று மாதங்களுக்கு அல்லது புதிய ஒப்பந்த புள்ளி கோரும் வரை தொடர்ந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | பணி நீட்டிப்பு காலம் |
|---|---|---|---|
| 01 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பழைய வார்டு எண்.01 முதல் 12 வரையிலான வீடுகளில் வீடுவீடாக மக்கும் குப்பை , மக்காத குப்பை தரம்பிரித்து வாங்குதல் பணி செய்தல் | DUDS Pvt.Ltd | மூன்று மாதகாலம் (ஏப்ரல்–22 முதல் ஜுன்–2022 வரை) |
| 02 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பழைய வார்டு எண்.13 முதல் 18 வரையிலான வீடுகளில், வீடு வீடாக மக்கும் குப்பை, மக்காத குப்பை தரம் பிரித்து வாங்குதல், எருவாக்குதல் பணி செய்தல் | Green City Social Service Society | மூன்று மாத காலம் (ஏப்ரல் –22 முதல் ஜுன்–2022 வரை) |
| 03 | Out Sourcing of 55 Nos of Non power for Dengu Breathing control Activities for 30 day at Nandivaram-Guduvancheri Municipality | Bluee Gold Solutions | மூன்று மாத காலம் (ஏப்ரல் –22 முதல் ஜுன்–2022 வரை) |
| 04 | Outsourcing of 41-Nos of Non Power for Computer Operation, Office Assistant, Driver, Street | Bluee Gold Solutions | மூன்று மாத காலம் (ஏப்ரல் –22 முதல் ஜுன்–2022 வரை) |

| | | | |
|---|---|---|---|
| | Light Maintenance, Water Supply Maintenance and Cleanliness work for 30- days at Nandivaram-Guduvancheri Municipality. | | |
| 05 | ஆண்டு ஒப்பந்தம்–நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி –2021–22 ஆம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பிரிவில் ஏற்படும் பழுதுகள் மோட்டார், சிறு மின் விசை பம்பு உடைப்புகள், கை பம்புகள் வார்டு எண்.10 முதல் 18 வரை பழுது பார்த்தல் பணிக்கு ஆண்டு ஒப்பந்தபடி மேற்கொள்ளுதல். | M/s. குமரன் எலக்ட்ரிகல்ஸ் | மூன்று மாத காலம் (ஏப்ரல் –22 முதல் ஜூன்–2022 வரை) |
| 06 | ஆண்டு ஒப்பந்தம் – நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி – 2021–22ஆம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பிரிவில் ஏற்படும் பழுதுகள், மோட்டார், சிறு மின் விசை பம்பு உடைப்புகள், கை பம்புகள் வார்டு எண்.01 முதல் 09 வரை பழுது பார்த்தல் பணிக்கு ஆண்டு ஒப்பந்தப் பணி மேற்கொள்ளுதல் | திரு.L. புன்னியகோட்டி | மூன்று மாத காலம் (ஏப்ரல் –22 முதல் ஜூன்–2022 வரை) |
| 07 | ஜே சி பி வாகனம் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | மூன்று மாத காலம் (ஏப்ரல் –22 முதல் ஜூன்–2022 வரை) |
| 08 | திடக்கழிவுகள் அகற்றுவதற்க்காக டிப்பர் லாரிகள் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | மூன்று மாத காலம் (ஏப்ரல் –22 முதல் ஜூன்–2022 வரை) |
| 09 | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு மட்டும் தினசரி 6000 | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | மூன்று மாத காலம் (ஏப்ரல் –22 முதல் ஜூன்–2022 வரை) |

| | | | |
|---|---|---|---|
| | லிட்டர் கொள்ளவு கொண்ட டிராக்டர் வாயிலாக குடிநீர் வழங்குதல் | | |
| 10 | குப்பை வடிகால் கழிவு மண் அகற்றுதல் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான வாடகை டிராக்டர் பணிக்கு | T.Sundaram Tractor | மூன்று மாத காலம் (ஏப்ரல் –22 முதல் ஜுன்–2022 வரை) |
| 11 | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையர் பயன்பாட்டிற்கு என தனியாக அரசு வாகனம் இல்லாததால் செங்கல்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் நிர்னயம் செய்த வாடகை வாகன விலை விகித அடிப்படையில் வழங்கப்பட்ட வாடகை வாகன ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல். | Laki Enterprises | மூன்று மாத காலம் (ஏப்ரல் –22 முதல் ஜுன்–2022 வரை அல்லது புதிய அரசு வாகனம் வழங்கும் வரை) |

**அலுவலக குறிப்பு** – நிர்வாக நலன், தூய்மை பணியின் அவசியம் மற்றும் குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட வ. எண்01 முதல் 11 வரையிலான ஒப்பந்தப்பணிகளை, புதிய ஒப்பந்த புள்ளி கோரும் வரை அல்லது வரும் மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.16**

வரிசை எண்.01 முதல் 11 வரையிலான பணிநீட்டிப்பு ஒரு(1) மாதம் காலம் வரை நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் இப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி விரைவாக அறிவிப்பு செய்து நடவடிக்கை மேற்கொள்ள நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கப்படுகிறது. மேலும் இதற்காகும் செலவினத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி இத்தீர்மானம் கோரி மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண். 6**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள வாடகை இனங்களுக்கு 2022–23ம் ஆண்டிற்கு குத்தகை ஏலம் மற்றும் கட்டணங்கள் வசூலிக்க கீழ்க்கண்டுள்ளவாறு இனங்களின் விவரம் அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண் | இனங்கள் | எண்ணிக்கை (ம) காலம் | ஏல விவரம் |
|---|---|---|---|
| 01 | NREP கடைகள் | 11 கடைகள் | முழுவதும் ஏலம் |
| 02 | நந்திவரம் கிராம சாலை கடைகள் | 20 கடைகள் | முழுவதும் ஏலம் |
| 03 | SJSRY | 3ல் 2 கடைகள் நீக்கம் | 1 கடை ஏலம் |
| 04 | பேருந்து நிலைய கடைகள் | 29 கடைகள் | முழுவதும் ஏலம் |
| 05 | கிராம சாலை (புதிய ) கடைகள் | 14 கடைகள் | முழுவதும் ஏலம் |
| 06 | APAMT கடைகள் | 19 கடைகள் | முழுவதும் ஏலம் |
| 07 | கறிக்கடை | 33 கடைகளில் 5 கடைகள் நீக்கம் | 28 கடைகள் மட்டும் ஏலம் |
| 08 | மீன் கடை | 43 கடைகள் | 43 கடைகள் ஏலம் |
| 09 | பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | 01.04.2022 முதல் | ஏலம் |
| 10 | கழிவு நீர் அகற்றுதல் | 01.04.2022 முதல் | ஏலம் |
| 11 | இரு சக்கர வாகன நிறுத்துமிடம் | 01.04.2022 முதல் | ஏலம் |
| 12 | தினசரி அங்காடி சுங்கம் | 01.04.2022 முதல் | ஏலம் |
| 13 | பேருந்து நிலையத்தில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 01.04.2022 முதல் | ஏலம் |

1. மேற்கண்ட இனங்கள் வாரியாக உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகள், கட்டண வசூல், தினசரி அங்காடி சுங்கம் வசூல் ஆகிய இனங்கள் வாரியாக ஏலம், மூன்றாண்டுகால குத்தகைக்கு 2022–2023ம் நிதியாண்டிற்கு விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

2. வ. எண். 03–ல் உள்ள மொத்த –3 SJSRY கடைகளில் 2 கடைகள் GST சாலை விரிவாக்கத்தின் காரணமாக இடிக்கப்பட்டதால் 2 கடைகள் மட்டும் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

3. வ.எண்.07 ல் உள்ள 33 கறிக்கடைகளில் 5 கடைகள் GST சாலை விரிவாக்கத்தின் காரணமாக இடிக்கப்பட்டதால் 5 கடைகள் மட்டும் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

குத்தகை இனங்கள், கட்டணங்கள் வசூல், தினசரி அங்காடி சுங்கம் வசூல் ஆகிய இனங்கள் அரசு விதிகளின் படி பொது ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.17**

உரிய வழிமுறைகள் பின்பற்றி இனங்கள் வாரியாக ஏலம் விட மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண். 7**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – பொது நிதி பணிகள்– இந்நகராட்சியில் 04.01.2022 அன்று மாண்புமிகு சிறு–குறு மற்றும் தொழிலாளர் நல துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் மனு நாளில் இந்நகராட்சி பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்துதர கோரி வரப்பெற்ற மனுக்கள், தற்போது புதியதாக பொறுப்பேற்றுள்ள இந்நகராட்சி நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்து அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி வரப்பெற்ற மனுக்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற மனுக்களில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் சாலை மேம்பாடு பணிகள், புதிய சாலைகள் அமைத்தல், ஏற்கனவே உள்ள சாலைகளில் ஏற்பட்டுள்ள சேதங்களை சீரமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால், கழிவுநீர் வடிகால் மற்றும் கால்வாய் ஓரங்களில் உள்ள முட்புதர்கள், செடிகள் அகற்றுதல் பணிகள் மற்றும் வார்டு பகுதிகளில் உள்ள இதர அனைத்து மேம்பாட்டு பணிகள் செய்து தர கோரப்பட்டுள்ளது.

எனவே சென்னைக்கு மிக அருகாமையில் வளர்ந்து வரும் நகரமாக நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி உள்ள காரணத்தினாலும் மக்கள் அதிக அளவில் இடம் பெயர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அதிக அளவில் குடியேற்றம் செய்து வரும் காரணத்தினாலும் அதிக குடியிருப்புகள் நாள் தோறும் பெருகிவரும் காரணத்தினாலும் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்வது பொது நலன் கருதி மிக அவசியமாகின்றது. எனவே மேற்க்கண்ட மனுக்களில் அடிப்படை வசதிகள் செய்து தரக் கோரி வரபெற்றுள்ள கோரிக்கைகள் குறித்து உரிய மதிப்பீடுகள் தயார் செய்து பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.18**

உரிய மதிப்பீடுகள் தயார் செய்து மன்றத்தின் பதிவிற்கு வைத்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண். 8**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி, இந்நகராட்சியானது இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 8.5/ச.கி.மீ மற்றும் 2011–ன் மக்கள் தொகையானது 44098 ஆகும். தற்போது இதன் மக்கள் தொகை சுமார் 65000 ஆக உயர்ந்துள்ளது. மேலும் அதிகப்படியான புதிய குடியிருப்புகள் தோன்றிய வண்ணம் உள்ளது. எனவே அதிக மக்கள் குடியேறுவதால் புதிய குடியிருப்புகளும் தோன்றிய வண்ணம் உள்ளதாலும் பொது மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றான குடிநீர் தேவை மிக இன்றியமையாத நிலையில் உள்ளது.

இந்நகராட்சி பகுதிகளில் தற்போது நகராட்சிக்கு சொந்தமான ஒரு வாகனம் (லாரி) மற்றும் தனியார்க்கு சொந்தமான ஒரு வாகனம் (டிராக்டர்) மூலம் தினசரி நடைமுறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இந்நிலையில் தற்போது நிலவி வரும் வறட்சியின் காரணமாக எதிர் வரும் கோடைக்காலங்களில் குடிநீர் விநியோகம் தட்டுப்பாடு ஏற்படும் நிலை வர இயலும் என்பதால் அதனை சமாளித்து பொதுமக்களுக்கு சீரான வகையில் குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு ஏற்கனவே பயன்பாட்டிலுள்ள 2 வாகனங்களுடன் கூடுதலாக 4

எண்ணிக்கை வாகனங்கள் குடிநீர் அவசர அவசியம் கருதி வாடகை முறையில் பயன்படுத்த ஒப்பந்த புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.19**

குடிநீர் பணியின் அவசியம் கருதி கூடுதலாக 5 எண்ணிக்கை வாகனங்கள் பணியில் ஈடுபடுத்திட மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண். 9**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – இந்நகராட்சியானது இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. மேலும் இந்நகராட்சி சென்னைக்கு அருகாமையில் உள்ள வேகமாக வளர்ந்து வரும் நகராட்சியாகவும், அதிக குடியிருப்புகள் நாள்தோறும் புதியதாக தோன்றிய வண்ணம் உள்ளது. மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அதிக வணிகப்பயன்பாடு, தொழிற்சாலை, பள்ளி வளாகங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ள காரணத்தினாலும், மக்கள் தொகை 2011–ன் கணக்கின் படி 44098/எண்ணிக்கையும், தற்போது சுமார் 1,00,000/எண்ணிக்கையில் மக்கள் தொகை கூடியுள்ளது.

எனவே மேற்கண்ட நகர வளர்ச்சியின் காரணமாக அடிப்படை தேவைகளில் ஒன்றான தெரு மின் விளக்கு பயன்பாடு மிக அவசியம் என்பதால் பொதுமக்களின் பொதுபயன்பாடு நலன் கருதி தெரு மின் விளக்கு தடையின்றி ஒளிர்வதற்க்கு தேவையான உதிரி பாகங்கள், பல்புகள் (LED), டியூப் லைட்டுகள் மற்றும் தெரு மின் விளக்கு சம்மந்தமான இதர உதிரி பாகங்கள் பணியின் அவசியம் கருதி உடன் வாங்கிட ஆகும் தோராய செலவினம் ரூ.9.80/ இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு .** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.20**

தெருமின்விளக்கு பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண். 10**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பயன்பாட்டில் உள்ள தெருமின்விளக்கு High Mast Light , மற்றும் Mini High Mast Light ஆகிய தெருமின் விளக்குகள் இந்நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டு வெகுகாலமாக உள்ளதால் பழுதுகள் ஏற்ப்பட்ட வண்ணம் உள்ளது. இதன் காரணமாக விளக்குகள் சரி வர எரியாத காரணத்தினால் பழுதுகள் ஏற்பட்டுள்ள உயர் கோபுர மின் விளக்குகள் மற்றும் சிறிய உயர் கோபுர மின் விளக்குகளில் உள்ள பழுதுகள் சரி செய்யவும் அதற்குண்டான உதிரி பாகங்களை வாங்கி பொருத்திடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50/ இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு .** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.21**

தெருமின்விளக்கு பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண். 11**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியானது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம், கழித்தலற்ற நகராட்சியாக மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு அத்தகைய நிலையை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது செயல்பட்டு வரும் நிலையில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதியாக சான்று பெறப்பட்டு இந்நகராட்சி செயல்பட்டு வந்த நிலையில் (ODF++) திறந்த வெளியில் மலம் கழிதலற்ற நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட சான்று பெற வேண்டி தினசரி நாளிதழில் மேற்க்கண்ட விவரத்தினை பிரசுரம் செய்து ஆட்சேபனைகள் ஏதாவது பெற நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.22**
மன்றம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**பொருள் எண். 12**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – இந்நகராட்சியானது பேரூராட்சியிலிருந்து அரசாணை (நிலை) எண். 94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021–ல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிவடைந்து செயல்பாட்டில் உள்ளது. இந்நகராட்சி பேரூராட்சியாக இருந்த போது வறுமை கோட்டின் கீழ் உள்ள மக்களின் பட்டியல் விவரங்கள் 2011–ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பழைய பட்டியல் கணக்கில் உள்ளது.

தற்போது நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியானது சென்னைக்கு மிக அருகாமையில் உள்ளதால், வேகமாக வளர்ந்து வரும் நகராட்சிகளில் ஒன்றாக, உள்ள காரணத்தினால் இதன் மக்கள் தொகை தற்போது சுமார் 1,00,000 எண்ணிக்கையில் உள்ளது. எனவே கூடுதல் மக்கள் தொகை குடியேற்றம் காரணமாக வறுமை கோட்டின் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கையும் கூடுதலாக உயர்ந்துள்ளதால், தற்போதைய மக்கள் தொகை வறுமை கோட்டின் கீழ் வாழும் மக்கள் கணக்கெடுப்பினை மேற்கொள்ள அரசை கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.23**
பொதுநலன் கருதி வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் பட்டியல் கணக்கெடுப்பு பணி அரசு வழிக்காட்டுதலின் படி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

**பொருள் எண்.13**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அரசாணை (நிலை) எண். 94– நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021–ல் பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் – 2022 நடைபெற்று செயல்பாட்டில்

உள்ளது. இந்நிலையில் நகர்மன்ற தலைவர் பயன்பாட்டிற்கு தனியாக அறை ஏதும் இல்லாததால் நகர்மன்ற தலைவர், நகரமன்ற உறுப்பினர்கள் முக்கிய பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் தங்களின் குறைபாடுகளை நேரில் தெரிவிக்க தனி அறை அமைத்து அதற்க்கான உட்கட்டமைப்புகளான டைல்ஸ் ஒட்டுதல் பணி, அலங்கார விளக்குகள், கழிவரை பொருட்கள் மற்றும் இதர கட்டுமான பணிகள் மேற்கொள்ள ஆகும் தேவையான செலவினம் ரூ.6.00/இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.24**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

பொருள் எண்.14

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அரசாணை (நிலை) எண். 94– நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021–ல் பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் – 2022 நடைபெற்று செயல்பாட்டில் உள்ளது. இந்நிலையில் நகர்மன்ற தலைவர் பயன்பாட்டிற்கு தனியாக அறை ஏதும் இல்லாததால் நகர்மன்ற தலைவர், நகரமன்ற உறுப்பினர்கள் முக்கிய பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் தங்களின் குறைபாடுகளை நேரில் தெரிவிக்கும் வகையில் இந்நகராட்சி அலுவலகத்தில் உள்கட்டமைப்புடன் கூடிய மேசை, நாற்காலிகள், கணினி, இதர முக்கிய பயன்பாட்டிற்குரிய வசதிகளுடன் தனி அறை அமைத்திட ஆகும் தோராய செலவினம் ரூ.6.00/இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.25**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

ஒம்/ M.K.D. கார்த்திக்
நகர்மன்ற தலைவர்
நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி